**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 89/2017 | பி.வா.சா. | : 1 |
| பெயர் | : சின்னச்சாமி @ கிருஷ்ணன் | த/பெ. | : நல்லியப்பன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : காசம்பட்டி |
| தேதி | : 11.12.2023 | வயது | : 37/2023 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11.53 A.M. – 12.18 P.M.

<u>பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>:

1) நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியாவேன். வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனக்கு படித்து சொன்ன பிறகு நான் அதில் கையெழுத்து செய்தேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

பி.வா.சா.ஆ.1 –13.12.2002 தேதியிட்ட பெத்தாயி என்பவருக்கு வெள்ளையம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் – அசல் (ஆவண எண். 1631/2002)

பி.வா.சா.ஆ. 2– 07.05.1973 தேதியிட்ட பெத்தாயி என்பவருக்கு, பழனி என்பவர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் (ஆவண எண். 1068/1973)

பி.வா.சா.ஆ.3 – 26.08.1976 தேதியிட்ட மேலூர் மாவட்ட உரிமையியல்

நீதிமன்றத்தின் அ.வ.எண். 60/1976 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை – சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.4 – மேலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ .வ.எண். 60/1976 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண். 255/ 1976 என்ற மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாணை – சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.5 – அ.வ.எண். 60/1976 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு திண்டுக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட E..P. 237/92ன் மனு மற்றும் அதன் மீதான நடவடிக்கைகள் – சான்றிட்ட நகல். (9 பக்கங்கள் கொண்டது)

பி.வா.சா.ஆ.6 – 21.11.2012 தேதியிட்ட 01.01.1987 முதல் 20.11.2018 வரையிலான வழக்குச் சொத்திற்கான வில்லங்க சான்று – இணைய நகல்.

பி.வா.சா.ஆ.7 – 15.09.1993 தேதியிட்ட நல்லியப்பன் தனது மனைவி மற்றும் மகன்கள் பெயரில் எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் – அசல். (ஆவண எண்.1006/1993)

பி.வா.சா.ஆ.8 – 27.02.2012 தேதியிட்ட நல்லியப்பன் பெயரிலுள்ள பட்டா – கணிணி நகல்.(பட்டா எண் 686)

பி.வா.சா.ஆ.9– 27.02.2012 தேதியிட்ட பெத்தாயி அம்மாள் மற்றும் வெள்ளையம்மாள் பெயரிலுள்ள பட்டா – இணைய நகல் (பட்டா எண்.1006)

பி.வா.சா.ஆ.10 – விளாம்பட்டி மின் பகிர்மானத்திலுளள மின் இணைப்பு எண் .38 பெத்தாயி அம்மாள் பெயரிலுள்ளதை காட்டக்கூடிய மின் கட்டண அட்டை – அசல்.

பி.வா.சா.ஆ.11 – 03.08.2013 தேதியிட்ட நத்தம், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் அ .வ.எண்.31/2013 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை – சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.12 – பட்டா எண். 1006 க்கு பெத்தாயி பெயரிலுள்ள சிட்டா மற்றும் 09.11.1972 தேதியிட்ட புல எண். 130/2 ன் வரைபடம் – அசல்.

பி.வா.சா.ஆ.13 – 28.02.2020 தேதியிட்ட பெத்தாயி மற்றும் பொதியழகி பெயரிலுள்ள பட்டா – இணைய நகல்.(பட்டா எண். 1006)

பி.வா.சா.ஆ.14 – 19.08.2019 தேதியிட்ட 1398 பசலி ஆண்டு முதல் 1402 மற்றும் 1424 வது பசலி ஆண்டிற்கு பெத்தாயி மற்றும் பொதியழகி பெயரிலுள்ள சாகுபடி அடங்கல் கணக்கு – உண்மை நகல்.(எண்ணிக்கை–4)

பி.வா.சா.ஆ.15 – பெத்தாயி அம்மாள் பெயரிலுள்ள கிஸ்தி ரசீதுகள் – (6 எண்ணிக்கை) மற்றும் பொதியழகி பெயரிலுள்ள கிஸ்தி ரசீது –1 – அசல்.

பி.வா.சா.ஆ.16 – 24.03.2017 தேதியிட்ட 14.03.2017 ல் பெத்தாயி இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் – சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.17 – 24.05.2017 தேதியிட்ட பெத்தாயி என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்று – அசல்.

பி.வா.சா.ஆ.18 – 1ம் பிரதிவாதி பொதியழகி வாதிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யவேண்டி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் , மதுரை கிளையில் தாக்கல் செய்த CrlOP.8478/2015 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – சான்றிட்ட நகல்.

2) வாதிகள் தரப்பில் மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் வழக்குச் சொத்திற்கு சம்பந்தப்பட்டவை அல்ல என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது . மேற்படி ஆட்சேபணை வழக்கின் முடிவில் தீர்மானிக்கப்படும் என்று தெரிவு செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களும் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்கள் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.18 வரை குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 11.12.2023. கையெழுத்து செய்துள்ளார்.

V UDAYASURIYA

Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.12.11 21:02:22 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.